www.Padasalai.Net www.TrbTnpsc.com

10

# திருப்பூர்

Register No. 10010

## காலாண்டுத் தேர்வு – 2024

நேரம் : 3.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள் : 100

### பகுதி - I

I. (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும் 15x1=15

1. காய்ந்த இலையும், காய்ந்த தோகையும் நிலத்திற்கு நல்ல உரங்கள், இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது :
(அ) தோகையும் சண்டும் (ஆ) இலையும் சருகும்
(இ) சருகும் சண்டும் (ஈ) தாளும் ஓலையும்

2. அறிஞருக்கு நூல், அறிஞரது நால் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது
(அ) வேற்றுமை உருபு (ஆ) எழுவாய் (இ) உவம உருபு (ஈ) உரிச்சொல்

3. 'பாடு இமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
(அ) கடல் நீர் ஒலித்தல் (ஆ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்
(இ) கடல் நீர் கொந்தளித்தல் (ஈ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்

4. 'வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்' என காற்றை நயம்பட உரைக்கும் நூல்
(அ) புறநானூறு (ஆ) திருமந்திரம் (இ) சிலப்பதிகாரம் (ஈ) முல்லைப்பாட்டு

5. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
(அ) துலா (ஆ) சீலா (இ) குலா (ஈ) இலா

6. இடைக்காடனாரிடம் பாடலை இகழ்ந்தவர் .............
இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ...........
(அ) அமைச்சர், மன்னன் (ஆ) அமைச்சர், இறைவன்
(இ) இறைவன், மன்னன் (ஈ) மன்னன், இறைவன்

7. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம்.
(அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் (ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
(இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் (ஈ) அங்கு வறுமை இல்லாததால்

8. ஒரு செய்யுளில் சொற்கள் முறை பிறழாமல் நிரல் நிரையாக அமைந்து வருவது
அ) மொழிமாற்றுப் பொருள்கோள் (ஆ) நிரல் நிரைப் பொருள்கோள்
(இ) கொண்டு கூட்டுப் பொருள்கோள் ஈ) ஆற்று நீர்ப் பொருள்கோள்

9. பெரிய மீசை சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
(அ) பண்புத்தொகை (ஆ) உவமைத்தொகை
(இ) அன்மொழித் தொகை (ஈ) உம்மைத்தொகை

10. "அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்" - இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்
(அ) குறுந்தொகை (ஆ) கொன்றைவேந்தன் (இ) கம்பராமாயணம் (ஈ) நற்றிணை

11. அருந்துணை என்பதைப் பிரித்தால் ............
(அ) அருமை + துணை (ஆ) அரு+ துணை (இ) அருமை +இணை (ஈ) அரு+இணை

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

12. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
(அ) நீதிவெண்பா (ஆ) பெருமாள் திருமொழி (இ) கம்பராமாயணம் (ஈ) சிலப்பதிகாரம்
13. இப்பாடலின் ஆசிரியர் யார்?
(அ) பரஞ்சோதி முனிவர் (ஆ) குலசேகரஆழ்வார்
(இ) கா.ப. செய்குத்தம்பிப்பாவலர் (ஈ) இளங்கோவடிகள்
14. ஆவிக்கு அருந்துணையாய் இன்பம் சேர்ப்பது ..........
(அ) கல்வி (ஆ) செல்வம் (இ) அருள் (ஈ) அறிவு
15. இப்பாடலில் இடம் பெற்றுள்ள எதுகைச் சொற்கள்
(அ)அருளை, அறிவை (ஆ) அருளை மருளை (இ) மருளை மதிக்கும் (ஈ) பெருக்கி இன்பம்

## பகுதி - II

### பிரிவு - 1

II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.
(21வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்) 4x2=8

16. விடைகளுக்கேற்ற வினா அமைக்க : (அ) திருமூலர் தம் திருமந்திரத்தில் மூச்சுப்பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியுள்ளார்.
(ஆ) காசி நகரத்தின் பெருமைகளைக் கூறும் நூல் காசிக்காண்டம்
17. வசன கவிதை குறிப்பு வரைக
18. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
19. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
20. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.
21. 'எப்பொருள்' - எனத் தொடங்கும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

### பிரிவு - 2

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க 5x2=10

22. மா, அல் - பொருளும், இலக்கணக் குறிப்பும் தருக.
23. கலைச்சொற்கள் தருக: (அ) Conversation (ஆ) Discussion
24. மூவகை மொழிகள் யாவை?
25. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக: (அ) தொடு-தோடு (ஆ) மலை-மாலை
26. எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.
(அ) ஐந்துசால்பு ஊன்றிய தூண் (ஆ) நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி
27. குறிஞ்சி நிலத்திற்குரிய கருப்பொருள் நான்கினைக் குறிப்பிடுக.
28. பழமொழிகளை நிறைவு செய்க.: (அ) உப்பில்லாப் .................. (ஆ) அளவுக்கு ................

## பகுதி - III

### பிரிவு - 1

IV. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2x3=6

29. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.
30. சோலைக் (பூங்கா) காற்றும் மின் விசிறிக் காற்றும் பேசிக் கொள்வதைப்போல் ஓர் உரையாடல் அமைக்க.
31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.
"ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" என்கிறார் மணவை முஸ்தபா. இன்றைக்குப் பல்வேறு துறைகளின்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது. மொழிபெயர்ப்பு இல்லை எனில் உலகை எல்லாம் வலையாகப் பிடித்திருக்கிற ஊடகத்தின் வளர்ச்சி இல்லை.

(அ) பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு எது தேவைப்படுகிறது?

(ஆ) மொழிபெயர்ப்பு பற்றி மணவை முஸ்தபா கூறுவது யாது?

(இ) இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

## பிரிவு - 2

**V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. (34வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)** 2x3=6

32. தமிழழகனார் தமிழையும், கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

33. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.

(அ) ''தென்னன் மகளே''! எனத் தொடங்கும் 'அன்னை மொழியே' வாழ்த்துப்பாடல்

(அல்லது)

(ஆ) ''வாளால் அறுத்துச் சுடினும்'' எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப்பாடல்

## பிரிவு - 3

**VI. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2x3=6

35. கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு! - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

36. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

37. வேலொடு நின்றான் இடுஎன் றது போலும்
கோலொடு நின்றான் இரவு - குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

## பகுதி - IV

**VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5x5=25

38. (அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

39. (அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

(ஆ) மாநில அளவில் 'நடைபெற்ற மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.





Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

41. கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக
கோவை மாவட்டம், கணபதி குறிஞ்சி நகரில் 5/20-ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் இளமுருகு மகன் இனியன் பத்தாம் வகுப்பு படித்து வருகிறார். அவர் நூலகத்தில் உறுப்பினராக விரும்புகிறார். தேர்வர் தம்மை இனியனாகக் கருதி கொடுக்கப்பட்டுள்ள நூலகப் படிவத்தை நிரப்புக.

42. (அ) மொழி பெயர்க்க
1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart. - Nelson Mandela
2. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going. - Rita Brown

(அல்லது)

(ஆ) இன்சொல் வழியின் நன்மைகளையும், தீயசொல் வழியின் தீமைகளையும் பட்டியலிடுக

| | இன்சொல் வழி | | தீயசொல் வழி |
|---|---|---|---|
| 1 | | 1 | |
| 2 | | 2 | |
| 3 | | 3 | |
| 4 | | 4 | |
| 5 | | 5 | |

## பகுதி - V

**VIII. அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3x8=24**

43. (அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

44. (அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

(அல்லது)

(ஆ) 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை.
மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. (அ)குமரிக் கடல்முனையும் வேங்கட மலை முகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித் தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் அமைத்து, பரணிபாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.
இக்கருத்தைக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) கட்டுரை எழுதுக. : விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com